**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் நாள் புதன்கிழமை

**இ.பி.எண்.41/2025 அதன் அ.வ.எண்.259/2022**

1) மாலையம்மாள்
2) முருகன் .... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

செல்லையா .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இந்த மனுவானது 15.04.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.சிவசங்கரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ராஜு அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

1). நிறைவேற்றுதல் மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 21 விதி 35 –ன் கீழ் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2). இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கானது சுவாதீனப் பரிகாரம் கோரி எதிர்மனுதாரருக்கு எதிராக அ.வ.எண்.259/2022 தாக்கல் செய்யப்பட்டு, அதில் கடந்த 07.02.2025 ம் தேதி மனுதாரர்களுக்கு ஆதரவாக தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

3) அதன் பின்னர் இந்நீதிமன்றத்தில் கடந்த 27.10.2025ம் தேதி தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்காக டெலிவரி வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. இந்நிலையில், உபயதரப்பினர்கள் சேர்ந்து குறிப்பாணை தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி குறிப்பாணையில், "மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் இரு தரப்பும் கலந்து பேசி, நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள ரூ.30,000/- பெற்றுக் கொள்ள சம்மதித்து எதிர்மனுதாரர் தபசில் வீட்டு சாவியை மனுதாரர்களிடம் ஒப்படைத்து, தபசில் வீட்டின் அனுபவம் முழுவதையும் மனுதாரர்கள் / வாதிகளிடம் ஒப்படைத்து விட்டார். Possession of Delivery ஆகிவிட்டால் நிறைவேற்றுதல் மனுவை முடித்து வைத்து உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென" மனுவுடன் தாக்கல் செய்துள்ள குறிப்பாணையில் கூறப்பட்டுள்ளது. மேற்படி சங்கதியை பரிசீலனை செய்கையில், நிறைவேற்றுகை மனு தபசில் சொத்தானது மனுதாரர்களுக்கு கிடைத்து விட்டது.

4) எனவே, நிறைவேற்றுகை மனுவில் மனுதாரர்கள் கோரிய பரிகாரமானது கிடைக்கப்பெற்று விட்டதை கருத்தில் கொண்டும், நீதியின் நலனை கருதியும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இந்த நிறைவேற்றுகை மனுவானது நீக்கரவு (Terminated) செய்யப்படுகிறது.

**இறுதியில், இம்மனு நீக்கரவு (Terminated) செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் எழுதப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY

Orders uploded on 15.04.2026.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.04.15 18:09:01 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

1). மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் : இல்லை

2). எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் : இல்லை

MARIMUTHU R MUNIYASAMY

Orders uploded on 15.04.2026.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.04.15 18:09:09 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முு.மா.உ.நீ, திருநெல்வேலி.
இ.பி.எண்.41/2025
அதன்
அ.வ.எண்.259/2022
வரைவு/சீரான உத்தரவு
நாள் –15.04.2026.